

# முன்னுரை

கிறிஸ்துவுடன் எனது உறவானது நான் 20 வயதுள்ளவனுக இருக்கையில், செப்டம்பர் 1956ல் ஆரம்பமாயிற்று. அப்போது எனது உள்ளத்தையும் ஜீவியத்தையும் என் ஆண்டவராகிய அவருக்கு ஒப்புக்கொடுத்த போது அற்புதமாக மாறினேன். அதுமுதல் அவரை உண்மையுடன் நேசித்து சேவிப்பதுடன், மற்றும் அநேகரோடும் அவருக்குள் வளருவதற்கு ஏற்றபோதனை மற்றும் பயிற்சி அளித்து வருவதை பெருஞ் சிலாக்கியமாகக் கருதுகிறேன்.

ஆனால் இத்தனை ஆண்டுகளாக இலகுவான அணுகுமுறைஉள்ள நற்செய்தியாளர் மற்றும் சீஷத்துவ பயிற்சிக்கு வசதியான ஓர் சுருக்கமான நூலைக் காணமுடியவில்லை என்று வருந்தியதுண்டு. அதன் விளைவாக, கிறிஸ்துவை மையமாகக் கொண்டு, வேதாகமத்தின் அடிப்படையில் நானும் பிறரும் பல ஆண்டுகளாக வெற்றிகரமாக பயன்படுத்தும் குறிப்புகளைக் கோர்த்துள்ளேன்.

இந்தத் தலைப்பின் கீழ் அநேக அற்புத படைப்புகளும் வெளியீடுகளும் இருந்தாலும், சுலபமாகப் பயன்பட ரத்தின சுருக்கமாக இருக்கக்கூடிய ஒன்றைத் தயாரிப்பதை எனது நோக்கமாக்கினேன்.

நான் பயன்படுத்தி வரும் "பவர் பாக்" என்றஇந்தத் தொகுப்பானது, "நீங்கள் போய், சர்வ சிருஷ்டிகளையும் சீஷராக்கி, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் கைக்கொள்ளும்படி அவர்களுக்குப் போதியுங்கள்" (மத்தேயு 28:19-20) என்றஇயேசுவின் மாபெரும் கட்டளையை அநேகர் நிறைவேற்றஉதவும் என நம்புகிறேன்.

நமது அருமை ஆண்டவர் உங்களை ஆசீர்வதித்து, இயேசு கிறிஸ்துவுக்கென்று பிறரை ஆதாயப்படுத்தி, வளர்த்து, அனுப்பும்படி தமது மகிமைக்கென்று உங்களைப் பயன் படுத்துவாராக.

# பொருளடக்கம்


பரிசுத்த ஆவி ........ 1

கிறிஸ்துவுக்குச் சாட்சி ........ 2

வெற்றியோடு சாட்சி பகருதல் ........ 3

உன் சாட்சியை எப்படி ஆயத்தமாக்கிக் கூறுவாய் ........ 4

சாட்சி பகரும் வழிகாட்டி படிவம் ........ 5

குறி வைத்தல் ........ 6

நற்செய்தி பரிமாற்றம் ........ 7,8


சீஷராக்குதல் ........ 9,10

ஆவிக்குரிய வளர்ச்சிக்கு நான்கு வார்த்தைகள் ........ 11

தேவவார்த்தையைப் பயனுள்ளதாகப் போதிப்பது எப்படி ? ........ 12

சிறு குழு பயிற்சி ........ 13

உங்கள் வேதாகமத்தைப் படிப்பது எப்படி.. ........ 14



# பரிசுத்த ஆவி

தேவனுடைய பரிசுத்த ஆவியின் தன்மையையும் ஊழியத்தையும் குறித்துப் படிக்கவும் புரிந்துக் கொள்ளவும் தவிர கிறிஸ்தவர்களுக்கு வேறு எதுவும் முக்கிய பாடமாக இராது. அவருடைய ஜீவனின் வல்லமையை நாம் பெற்று அநுபவிக்கும் போது, நாம் கிறிஸ்துவின் அன்பைப் பிறரிடம் பிரதிபலித்து, அவரது மாபெரும் கட்டளையை நிறைவேற்றும் படியான இயல்புக்கு அப்பாற்பட்ட முறையில் தகுதி பெற்றிருப்போம்.

1. அவர் யார் ? அவர் தேவன். அவருடைய தன்மையில் ஒருவர் (யோவான் 4:24, மத்தேயு 28:19-20).

2. அவர் ஆள் தத்துவமுள்ளவர் (யோவான் 16:13).

3. அவர் உலகத்தை (அவிசுவாசிகளை) பாவம், நீதி மற்றும் நியாயத் தீர்ப்பு குறித்து கண்டித்து உணர்த்துவார் (யோவான் 16:8).

4. அவர் கிறிஸ்துவைப் பற்றி சாட்சி (கூறு) பகருவார் (யோவான் 15:26).

5. அவர் நம்மைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார் (யோவான் 16:13).

6. ஒருவன் மறுபடியும் பிறக்கையில் அதற்குத் துணையாகிறார் (யோவான் 3:5.6).

7. அவர் ஒவ்வொரு கிறிஸ்தவ விசுவாசியின் உள்ளத்திலும் வாசஞ் செய்கிறார் (1.கொரிந்தியர் 6:19-20).

8. அவர் தேவனுடைய ஆவிக்குரிய வரங்களின் ஆதாரமாக இருக்கிறார் (1.கொரிந்தியர் 12:1-11) (ரோமர் 12:6-8).

9. தேவனுக்குக் கனி (நற்குணங்களைக்) கொடுக்க உறுதுணையாக இருக்கிறார் (கலாத்தியர் 5:22-23).

10. அவர் நம்மைப் பெலப்படுத்தி கிறிஸ்துவுக்குச் சாட்சி (நற்சாட்சி) களாக்குகிறார் (அப்போஸ்தலர் 1:8).

11. தேவன் தமது பரிசுத்த ஆவியினால் நாம் நிறையும்படி கட்டளையிடுகிறார் (எபேசியர் 5:18).

# கிறிஸ்துவுக்குச் சாட்சி



கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நீங்கள் சிறந்த சாட்சியாகும்படிக்கும், பிறரை அவருக்கென்று ஆதாயம் பண்ணும்படிக்கும், உங்களுக்கு உதவவும் உங்களை உற்சாகப்படுத்தவும் கீழ்கண்ட குறிப்புகளை ஆயத்தஞ் செய்துள்ளோம்..

1. முதலாவதாக, நீங்கள் உங்கள் சொந்த இரட்சிப்பு குரித்து நிச்சயம் பெற்றிருக்க வேண்டும். உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்பதை நீங்கள் அறிய தேவன் விரும்புகிறார் (1. யோவான் 5:13).
2. சிறந்த முறையில் செயல்பட வேண்டுமாயின், உங்களை முழுவதுமாகக் கிறிஸ்துவுக்கு அர்பணித்து, தேவனுடைய ஆவியின் வல்லமையால் நிரப்பப்பட வேண்டும் (அப்போஸ்தலர் 1:8, 4:31, 9:17,20)..
3. "வெற்றியுள்ள சாட்சிமுறைமை"யை நன்றாகக் கற்றறிந்து அதைப் பயன்படுத்துங்கள். இயேசு கிறிஸ்துவைப் பிறருடன் பகருவதில் பரிசுத்த ஆவியின் பெலத்தில் ஈடுபட்டு, அதன் பலனைத் தேவனிடம் விட்டுவிடுங்கள்.
4. 4.தேவனுடைய வார்த்தையை அன்றாட வாழ்வில் "பயன்படுத்தும் அறிவு" வளரும்படி வாசியுங்கள். யாரையாவது கிறிஸ்துவினிடம் பரிசுத்தஆவியின் உதவி கொண்டு வழிநடத்தும்படி உங்கள் இருதயத்தில் அவரது வார்த்தையை வைத்து வையுங்கள் (2.தீமோத்தேயு 2:15).
5. உங்களது சரீர முயற்சிகளிலிருந்து ஆவிக்குரிய முயற்சிகளுக்கு மாறும்படி நல்ல யுக்திகளைக் கற்றுப் பயன்படுத்துங்கள். நீங்கள் எப்படி கிறிஸ்துவை முதலில் ஏற்றுகொண்டீர்கள் என்றசாட்சியைப் பகர்ந்து, அவரை எப்படி அறிந்தீர்கள் என்று கூறுங்கள். முடிந்தால், "தேவதைத் தனிப்பட்ட முறையில் அறிய விருப்பமா ?" என்றவேத ஆதாரமுள்ள நல்ல கைப்பிரதியைப் போன்றபிரதிகளைப் பயன்படுத்துங்கள்.
6. கிறிஸ்துவை அறிவிக்கையில் சாதாரண அணுகுமுறையில் இரட்சிப்பின் திட்டத்தைப் பின்பற்றி கூறுக:
   - அ. தேவன் உங்களை நேசிக்கிறார். நீ அவரை நேரில் அறியும்படி உன்னை உண்டாக்கினார் (யோவான் 3:16, யோவான் 17:3).
   - ஆ. எல்லா ஜனங்களும் பாவஞ்செய்து, தேவனை விட்டு விலகினார்கள். ஆகையால் தேவனைத் தனியாக அறிய முடியாது; அவரது அன்பையும் உணர முடியாது (ரோமர் 3:23; ரோமர் 6:23).
   - இ. மனித பாவத்திற்கு நிவாரணமாக இயேசு கிறிஸ்து ஒருவரையே தேவன் தந்துள்ளார். அவர் மூலமாக மட்டுமே தேவனைத் தனிப்பட்ட முறையில் அறிந்து, அவருடைய அன்பை உணர முடியும் (ரோமர் 5:8; யோவான் 14:6).
   - ஈ. நாம் ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவை எனது ஆண்டவர் என்று ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்போது, நாம் தனிப்பட்ட முறையில் அவரை அறிந்து, அவருடைய அன்பை உணர முடியும் (யோவான் 1:12, எபேசியர் 2:8-9, வெளிப்படுத்தல் 3:20).
7. ஜீசஸ் படத்தின் வீடியோ காட்சியை உன் நண்பனிடம் பகர்ந்து, அல்லது அதைப் பார்க்கும்படி அவனை/ளை உங்கள் வீட்டிற்கு அழையுங்கள்.
8. நீ சாட்சி பகரக் கேட்ட நபர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால், உடனடியாக அவரது சினேகிதர் யாரிடமாவது அதைப் பகரும்படி உற்சாகப் படுத்துங்கள். (லூக்கா 8:39). பின்பு சீக்கிரமாக உங்கள் முதல் சீஷத்துவ சந்திப்புக்கு ஏற்பாடு செய்யுங்கள்.
9. பேசுகையில், உங்கள் சொந்த எண்ணத்தை விட்டு, தேவனுடைய வார்த்தையைத் தெளிவாகப் பயன்படுத்துங்கள். சிரித்த முகமாய் உற்சாகத்துடன் இருங்கள். நீங்கள் பேசுகிறநபரின் பெயரைப் பயன்படுத்தும்போது உற்றுப் பார்த்துப் பேசுங்கள்.
10. பிறரின் தேவையைக் குறித்து உண்மையான ஆர்வத்துடன் சொல்லக் கேளுங்கள்; மரியாதையுடனும் நட்புடனும் பழகுங்கள்.
11. எல்லாவற்றுக்கும் மேலாக, இயேகிறிஸ்துவை முக்கியப்படுத்துங்கள். உங்கள் திருச்சபை பிரிவையோ வேறு மதத்தையோ தவிர்த்து அவரை மையமாக வைத்து பேசுங்கள்.
12. பின் கண்டவைகளைத் தவிர்க்க முயலுங்கள்:
   - அ. குறைபேசுதல் அல்லது வாதாடுதல்.
   - ஆ. "உன்னைவிட நான் பரிசுத்தவான்" என்றமனப்பாங்கு.
   - இ. அதிகப் பேச்சு. அதனால் அவர்களுடைய தேவைகளைக் கேட்டறிய தடையாகிறது.
   - ஈ. தீர்மானத்தைத் திணிப்பது. மெதுவாகக் கேளுங்கள், வற்புறுத்த வேண்டாம் (2.தீமோத்தேயு 2:23-25).
13. கிறிஸ்துவுக்காகச் சாட்சி பகருவதில் பல ஆதாயங்கள் உள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக அது தேவனுக்கு மகிமை கொண்டு வருகிறது. இயேசு கிறிஸ்து அறியாதவர்களுக்கு அவரை அறிமுகப்படுத்துகிறது. அதன் மூலம் எல்லாவித ஜாதி ஜனத்தைச் சந்திக்கலாம். .எங்கும் எப்போதும் கிறிஸ்தவ சேவை செய்யும்படி அது சிறந்த வாய்ப்புகளை ஏற்படுத்துகிறது. மேலும் ஆவிக்குரிய வாழ்வில் ஆழமாக வளர அது உதவுகிறது.

# வெற்றியோடு சாட்சி பகருவது என்பது

"பரிசுத்த ஆவியின்
வல்லமை கொண்டு
இயேசு கிறிஸ்துவுக்குச்
சாட்சியைப் பரிமாறும்படி
மனதார முயன்று,
அதன் விளைவுகளைத்
தேவனிடம்
விட்டு விடுவதாகும்."

# உன் சாட்சியை எப்படி ஆயத்தமாக்கிக் கூறுவாய்



தனிநபர் மற்றும் ஓர் குழுவிடம் உங்கள் தனிப்பட்ட சாட்சி அல்லது கிறிஸ்துவுடன் இருக்கிறபந்தத்தை எடுத்துக் கூறஉதவியாக இருக்கும்படி பின்வரும் ஆலோசனைகளைத் தருகிறோம். இந்த எளிமையான ஆலோசனைகளைப் பின்பற்றுவதன் மூலம், உங்களுக்குக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து செய்ததைக் குறித்து நீங்கள் பிறரிடம் பகுத்தறிவோடு பகர உதவியாகும்.

1. நீங்கள் சாட்சி பகரும்போது பேசும் வார்த்தைகளின் மூலம் அவற்றைக் கேட்கிறவர்கள் கிறிஸ்துவை மகிமைப்படுத்தும்படி, பரிசுத்த ஆவியானவரிடம் வேண்டிக்கொள்ளுங்கள் (அப்போஸ்தலர் 1:8).
2. இந்த எளிதான தலைப்புகளின்படி உங்களது தனிப்பட்ட சாட்சியை உருவாக்கவேண்டும்: (1) இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுமுன் இருந்த உங்கள் வாழ்க்கை (2) கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டது எப்படி? (3) கிறிஸ்துவை ஏற்றப் பின் உங்கள் வாழ்க்கை எப்படி உள்ளது? (அப்போஸ்தலர் 26:1-23, அப்.22:1-21). இந்த தலைப்பு எங்கு ஆரம்பித்து, எங்கு சென்று எங்கு முடிப்பது என்று சொல்ல உதவுகிறது.
3. கிறிஸ்துவை அனைத்துக்கும் முன்னால் வையுங்கள். அவரை ஏற்றுக் கொள்வதனால் இரட்சிப்பு கிடைக்கிறது என்று கூறுங்கள். உங்களது சாட்சியைக் கேட்பவர் எப்படி கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது என்றறிய நீங்கள் உதவ வேண்டுவதை மனதில் கொள்ளுங்கள் (லூக்கா 8:38-39).
4. ஒரு குழுவிடம் சாட்சி பகரும்படி சராசரி நான்கு அல்லது ஐந்து நிமிடங்கள் போதும். நான் கைந்து நிமிட உரைக்கு நீங்கள் ஆயத்தமாக இருக்கும்போது, சென்றஇடத்தில் கிட்டும் வாய்ப்பைப் பொறுத்து, அதைச் சுருக்கவும் நீட்டவும் முடியும்.
5. சாட்சி என்பது கிறிஸ்து உங்களுக்குச் செய்ததைப் பகருவது அல்லது அவர் உங்களுக்கு எப்படிப்பட்டவர் என்பதைப் பகருவது ஆகும். அது ஜனங்களுக்குப் "பிரசங்கம்" செய்யும் நேரமல்ல. பிறரிடம் உன் மனதிலுள்ள இயேசுகிறிஸ்துவைக் குறித்தவைகளை வெளிப்படுத்த ஒரு அற்புதமான சந்தர்ப்பமாகும்.
6. உனது சாட்சியை, வேதத்திலுள்ள இரண்டொரு வசனங்களைத் தெரிந்தெடுத்து, அதில் ஆரம்பி. நன்றாக ஆரம்பித்து நன்றாக முடிக்கப் பார். அப்போது உனது சாட்சி ஊக்கமளிப்பதாகவும் ஆக்கமுள்ளதாகவும் இருக்கும்.
7. குழுவிலுள்ள அனைவரும் கேட்கத்தக்கதாக உரத்த சத்தமாகவும் தெளிவாகவும் பேசுங்கள். எப்போதும், உற்சாகமுள்ளவர்களாக இருப்பது மிகமுக்கியம். ஏனெனில் நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக இருப்பதே மகிழ்ச்சிக்குரிய விஷயம் அல்லவா!
8. உங்கள் உரையாடலை நடைமுறைப் படுத்துங்கள். கிறிஸ்துவும் ஜீவியத்தின் பிரச்சனைகளையும் கஷ்டங்களையும் ஒதுக்கினதில்லை. ஆனால் அனைத்தையும் நாம் சமாதானத்தோடும் மன தைரியத்தோடும் சந்திக்கும்படி அவர் ஜீவியத்தின் நோக்கமும் வழிநடத்துதலும் அளிக்கிறார்.
9. தவிர்க்க வேண்டியவைகளில் கவனம் தேவை:
   - ஹ. "பிரசங்க" போக்கில் அமைந்த சாட்சி. இயல்பாக இரு. பிறர் என்ன செய்யவேண்டும் என்று கட்டளையிடாதே.
   - ஸ. திருச்சபைப் பிரிவுகளின் பெயர் அல்லது மதங்களின் பெயர்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ எடுக்காதே.. கிறிஸ்துவை முக்கியப்படுத்து.
   - ஷ. குனிந்து வளைந்து நெகிழ்ந்து இருக்கும் உளைவான சரீர நிலை. பயந்த தோற்றத்தை விட்டு, வேண்டிய அளவு வசதியாக அமருங்கள்.
   - க்ஷ. உங்கள் இயலாமைக்காக வருத்தம் தெரிவித்தல். அப்படி கூறுவதால் நேயரை அதன் பக்கம் ஈர்த்து, உங்கள் பெலவீனங்களை மேம்படுத்துவீர்கள். பரிசுத்த ஆவி உங்களைப் பெலப்படுத்தும்படி கேளுங்கள். (அப்போஸ்தலர் 4:31).
   - க். கிறிஸ்தவ ''அடைமொழி''களான அல்லேலூயா, இரட்சிக்கப்பட்டேன், ஆமென் போன்றவைகள்.
10. இறுதியாக, உங்கள் சாட்சியை அநேகம் பேருடன் பகர முயலுங்கள். அது உங்களது கிறிஸ்தவ ஜீவியத்தைப் பலப்படுத்தி, கிறிஸ்துவுக்காகப் பிறரை அணுக உதவும்.

# சாட்சி பகரும் வழிகாட்டி படிவம்

1. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுமுன் எப்படி இருந்தேன்:

2. நான் எப்படி கிறிஸ்துவை ஏற்றுகொண்டேன்:

3. கிறிஸ்துவை ஏற்றுகொண்டபின் என் வாழ்வில் என்னென்ன மாற்றங்களைத் தேவன் கட்டளையிட்டார்:

4. பொருத்தமான வேத வாக்கியங்கள்

# குறி வைத்தல்



1. இயேசு கூறினார்: "நீங்கள் உலகமெங்கும் போங்கள்" (மாற்கு 16:15).
   "நீங்கள் போய்ச் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்" (மத்தேயு 28:19).
2. எனது "உலகம்" எங்கு உள்ளது ?
   - ✦ எனது வீடு/குடும்பம்
   - ✦ எனது அயலகத்தார்
   - ✦ எனது அலுவலகம்/பணித்தளம்
   - ✦ எனது நண்பர்கள்
     பொதுவில்,
   - ✦ எனது கல்வி நிலையம்

   எனது கிரிக்கெட்/டென்னிஸ் ஆட்டம்
   எனக்கு விருப்பமான உணவு விடுதி
   எனது சிகை அலங்காரம்/அழகு கலை
   எனது உடற்பயிற்சி/விளையாட்டு வீரர்,
   எனது குடியிருப்பு, பணி மனை
   மற்றும் விளையாட்டு மைதானம்.

3. நான் மீன் பிடிக்கச் சென்றால், மீன் கிடைக்கும் இடம் தேடிச் செல்ல வேண்டும்.

4. நான் ஜனங்களைப் பிடிக்க வேண்டுமானால், அவர்கள் இருக்கும் இடம் தேடிச் செல்ல வேண்டும்.

5. மக்களை மனதில் கொண்டு நாம் கடைப் பிடிக்கக்கூடிய செயல்பாடுகள் எவை ?
   - ✦ நட்புகளை ஏற்படுத்தல்
   - ✦ வீட்டு விலாசத்திற்கு கடிதம்/குறிப்பு அனுப்புதல்
   - ✦ உணவு/காப்பிகுடிக்க அழைத்தல்
   - ✦ சுவிசேஷ கூட்டங்களுக்கு அழைத்தல்
   - ✦ வீட்டுவிருந்துக்கு குடும்பமாக நேரடி சந்திப்பு: வீடு/அலுவலகம் அழைத்தல்
   - ✦ விளையாட்டு போட்டிகளை நடத்துதல்
   - ✦ ஆஸ்பத்திரி/சிறைச்சாலை சந்திப்பு
   - ✦ 'ஜீசஸ்' படத்தைக் கடனாக அளித்தல்

6. நீங்கள் ஜெபத்துடன் நற்செய்தி அறிவித்து சீஷராக்கக்கூடிய மூவரைப் பேரிடுங்கள்.

   1. ................................................................................................................
   2. ................................................................................................................
   3. ................................................................................................................

# நற்செய்தி பரிமாற்றம்



1. இன்று கிறிஸ்தவர்கள் பொதுவாகக் கிறிஸ்துவை அறிவிக்கத் தயங்குவதாற்குக் காரணம் என்னவென்றால், உரையாடலை எப்படி ஆரம்பிப்பது என்று தெரியா திருப்பதனாலேயே.

2. வேத வாக்கியம் நம்மை ஆயத்தமாக இருக்கும்படி கூறுகிறது

   - 1. பேதுரு 3:15 "எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்".
   - 2. தீமோத்தேயு 4:2 - "ஜாக்கிரதையாய் பிரசங்கம் பண்ணு".
   - 2. தீமோத்தேயு 2:15 - "ஜாக்கிரதையாய் இரு".

3. பரிமாற்றம் என்பது மாம்ச பிரகாரத்திலிருந்து ஆவிக்குரிய பிரகாரத்திற்கு மாறுதல் ஆகும்.

4. இரண்டு வகையான பரிமாற்றங்கள் உள்ளன:

   அ. **பிறர் கேட்கும்** கேள்விகள் அல்லது விளக்கங்களுக்கு உங்களது "ஆவிக்குரிய செவிகளை"த் திறந்து வையுங்கள் (1.பேதுரு 3:15).

   ஆ. உரையாடலை **ஆரம்பிக்க** "சாரமுள்ள" கேள்வி அல்லது வாக்கியம் பயன் படுத்தலாம். உதாரணம்: யோவான் 4:7-10 ல் இயேசு, "ஜீவத்தண்ணீர்" என்ற பதத்தைப் பயன்படுத்தி அவளது கவன ஈர்ப்பைப் பெற்றார்.

   குறிப்பு: எப்போதும் நற்செய்தி பகரும்படி கைப்புத்தகத்தை உங்கள்வசம் வைத்திருங்கள்.

5. பிறர் உன்னிடம் கூறக்கூடிய சில கேள்விகள் அல்லது விளக்கங்களைக் காண்போம்: கீழ்கண்ட உனது பதில் கட்டி எழுத்தில் அச்சடிக்கப்பட்டுள்ளது.

   ✦ நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? **நான் 92சதவீதம் நன்றாக இருக்கிறேன்.**

   ✦ நீங்கள் என்ன செய்கிறீர்கள்? **நான் அலுவலகத்தில்/விவசாய பணி புரிகிறேன்.**

   ✦ என்ன விசேஷம்? **நிறைய புது விஷயங்கள் உள்ளன, குழந்தை பிறந்தது. நான் புது ஜீவன் பெற்றேன்.**

   ✦ மேலும் என்ன விசேஷம்? **பரலோகம், அதை நோக்கி இந்நாட்களில் பயணஞ் செய்கிறேன்.**

   ✦ நீங்கள் எப்போதும் சந்தோஷமாக சிரித்துக் கொண்டே இருக்கிறீர்களே? **அதற்குக் காரணம், என்னிடம் பரம இரகசியம் உண்டு/எனக்குச் சிறப்பான ஒருவரைத் தெரியும்.**

   ✦ நான் இப்போதுதான் ஓர் நண்பனின் சவ அடக்கம் முடித்து வருகிறேன். **சவ அடக்கம் சிலர் வாழ்க்கையை உலுக்கி விடுகிறது. ஆனால் சில வருடங்களுக்கு முன்பு முன்எனக்கு ஒன்று சம்பவித்தது. அது எனக்கு மிகவும் உதவிற்று .**

   ✦ நான் திருமணமாகி ............வருடங்கள் ஆகிவிட்டன. **அது ஆச்சரியம் தான்.! மணவாழ்வு நாம் வைக்கும் உறவுகளில் இரண்டாம் வகை சிறந்த உறவு ஆகும்.**

   ✦ நமது உலகம் சிதறி வருகிறது. (வேறு ஏதாவது வேண்டாத பேச்சு). **அப்படித்தான் உலகம் உள்ளது. ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்பு நான் பெற்றஅநுபவம்** எனது எதிர்காலத்துக்கு நல்ல ஆதாரமாக அமைந்து விட்டது.

   ✦ இன்று எதுவும் இலவசம் இல்லை. **ஆம், ஒன்று உண்டு! உலகம் அனைத்துமே நமக்குள்ள பெரிய ஈவு. அதைப்பற்றி வேதாகமத்தில் ரோமர் 6:23ல் வாசிக்கலாம்.**

   ✦ எனக்கும் சிறப்பான நாள் ஒன்று வரும். **அற்புதம்! எனக்கு ஓர் சிறந்த நண்பனையும் சிறந்த இரகசியத்தையும் தெரிந்திருப்பதால், எல்லா நாட்களையுமே சிறந்த தினங்களாகக் கருதுகிறேன்.**

   ✦ எனக்குப் ஓர் தினம் உண்டு! **எனக்குப் தினம் வரும்போது என்னிடம் ஓர் சிறந்த இரகசியம் உள்ளதால் அது எனக்கு அன்று உதவும்.**

   ✦ ஆ, இந்தத் தண்ணீர் சுடுகிறது! **ஆம். அது என்னைச் சுட்டாலும், நான் உண்மையில் பரலோகம் செல்வதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.**

6. நான் எனது உரையாடலை ஒரு சாரமுள்ள வாக்கியமாகவோ அல்லது கேள்வியாகவோ ஆரம்பிக்கிறேன்.

- ✦ நான் என் மனைவியைத் திருமணஞ் செய்தபோது, அது என் வாழ்வின்இரண்டாவது மிக முக்கியமான தீர்மானமாகக் கருதுகிறேன்.
- ✦ ...................ஆண்டுகளுக்கு முன்பு, என் வாழ்வுக்கு மிகவும் தேவையான ஒரு தீர்மானத்தைச் செய்தேன்.
- ✦ ...................ஆண்டுகளுக்கு முன்பு, மரணத்தைப் பற்றி மிகவும் பயந்தேன், ஆனால் அப்போது அதை முழுவதுமாக மாற்றக்கூடிய ஒரு ஆச்சரியமான சம்பவம் நடந்தது.
- ✦ அந்த வெற்றி/முக்கிய சம்பவம் என் வாழ்வில் கண்டதினால் நான் மிகவும் பாக்கியசாலி.
- ✦ உனது வாழ்வில் மிகவும் முக்கியமான காரியம் எது ?
- ✦ உனது வாழ்வின் தலைசிறந்த நோக்கம் எதுவாக இருக்கும் ?
- ✦ இப்போது நீ சந்தித்துக்கொண்டிருக்கிறமிக முக்கியப் பிரச்சனை எது ?
- ✦ உன் வாழ்வில் இப்போது நடந்துக் கொண்டிருக்கிற மிக முக்கிய காரியம் எது ?
- ✦ இந்த வாழ்வில் உன் ஆவிக்குரிய பயணத்தில் நீ எங்கே இருக்கிறாய் ?
- ✦ உன்னோடு நான் ஒரு நல்ல விசேஷத்தைப் பகரலாமா ?
- ✦ எப்போதாவது நீ ஆவிக்குரிய நான்கு விதிமுறைகளைப் பற்றிக் கேட்டதுண்டா ?
- ✦ ஒருவர் உன்னிடம், "கிறிஸ்தவனாய் இருப்பதென்றால் என்ன ?" என்று கேட்டல், உன் பதில் என்னவாக இருக்கும் ?
- ✦ உனது அபிப்பிராயத்தின்படி ஒருவன் கிறிஸ்தவனாகிறது எப்படி ?
- ✦ தேவனைத் தனிப்பட்ட முறையில் தெரிந்துகொள்ள முடிந்தால் அவரோடு உறவு கொள்வதில் உனக்கு விருப்பம் உண்டா ?
- ✦ உன்னிடம் ஒருவர், "நான் தேவனைக் கண்டுபிடிப்பது (அல்லது அறிவது) எப்படி ?" , நீ என்ன சொல்வாய் ?
- ✦ பரலோகம் என்று ஒன்றிருந்தால், நீ மரிக்கும்போது அங்கு செல்ல விரும்புகிறாயா ? அது எவ்வாறு என்று அறிய விருப்பமா ?
- ✦ ஒரு வேளை இன்று இரவு நீ மரித்து தேவனுக்கு முன்பாக நிற்கும்போது, அவர் உன்னிடம், "உன்னை ஏன் பரலோகத்தில் அநுமதிக்கவேண்டும் ?" என்று கேட்டால் நீ என்ன கூறுவாய் ?
- ✦ ஒரு அளவுக்கோலில் 1 முதல் 10 வரை ( ஒவ்வொரு 1க்கும் 10சதவீதமாக 100 சதவீதம்) குறியீடு இருப்பதாக வைத்துக்கொள். அதன்படி உனது பாவமன்னிப்பு மற்றும் நித்திய ஜீவனைக் குறித்த நிச்சயம் பற்றி குறியீடு செய்தால் அளவுகோலில் நீ எங்கு நிற்பாய் ?
- ✦ இன்று மக்கள் ஆவிக்குரிய தலைமையைக் குறித்த காரியங்களில் தாங்கள் நடந்துக் கொள்ள வேண்டிய விதத்தில் நடக்கிறார்கள் என்று நினைக்கிறாயா ?

# சீஷராக்குதல்

இயேசு கூறினார்: “நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி (முதிர்ச்சி பெற்றசீஷரான கிறிஸ்தவர்களாக்கி), நான் உங்களுக்குப் போதித்த எல்லாவற்றையும் அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்” (மத்தேயு 28:19;20).

பின்வரும் ஆலோசனைகள் இந்த மாபெரும் கட்டளையைச் சரியாக நிறைவேற்றும்படி உதவியாகக் கொடுக்கப்பட்டுள்ளன:

1. கர்த்தருக்கு உங்களை (உங்கள் நேரம், திறமைகள், மற்றும் சொத்து) விட்டுக் கொடுத்து அர்ப்பணியுங்கள் (ரோமர் 12:1-2).
2. தேவ ஆவி உங்களை நிரப்பிக் கட்டுப்படுத்த அநுமதியுங்கள். (அப்போஸ்தலர் 1:8; எபேசியர் 5:18).
3. உங்களைத் தேவனுடைய வார்த்தையில் பண்படுத்துங்கள் (2,தீமோத்தேயு 2:15, 3:16-17).
4. உங்கள் சீஷன் ஈடுபட வேண்டிய அர்ப்பணிப்பில் அடங்கியவைக் குறித்து ஓர் ஆயத்தச் சந்திப்பு ஏற்படுத்தவும், குறிப்புகளத் திரும்பி பார்க்கவும், பொருந்தும் நேரத்தையும் அமைதலான இடத்தையும் குறியுங்கள். வாரம் ஒருமுறை 1½ மணி நேரம் பொதுவாய்ப் போதுமானதாக இருக்கும்.
5. உங்கள் முதல் சீஷத்துவ சந்திப்பில், சீஷத்துவத்தின் இரு வித குறிகளை பகருங்கள். அவற்றைசேர்ந்த வசனங்களுடன் மனப்பாடம் செய்ய வையுங்கள்.

   அ. ஆவிக்குரிய வளர்ச்சியும் முதிர்ச்சியும். (கொலோசெயர் 2:6-7).

   ஆ. ஆவிக்குரிய பெருக்கம். (2.தீமோத்தேயு 2:2)..
6. எப்போதும் இயேசு கிறிஸ்துவை உங்களது எல்லா ஐக்கிய நேரங்களிலும் உரையாடல்களிலும் முக்கியப்படுத்தி வைக்கப் பாருங்கள்.
7. பிறருடைய வாழ்க்கையில் ஈடுபாடுகொள்ள நீங்கள் மனதுள்ள வர்களாயும், ஆயத்தமுள்ள வர்களாயும் இருங்கள் (1.தெசலோனிக்கேயர் 2:7-12, கொலோசெயர் 1:28-29).
8. நீங்கள் சீஷராக்கும் நபரிடம் உண்மையான நட்பை வளர்த்து விடுங்கள் (தொலை பேசி உரையாடல், விருந்துக்கு அழைப்பு, ஐக்கியங்கள், நற்கிரியைகள், பொழுதுபோக்கு முதலியவைகள்). உறவுகள் என்பது மனதிருப்தியைவிட மிக முக்கியம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
9. அவர்களிடம் புதிய மொழி பெயர்ப்புள்ள புதியஏற்பாடு அல்லது வேதாகமம் உள்ளதா என்று கவனியுங்கள். அவர்கள் யோவான் சுவிசேஷத்தைத் தொடர்ந்து (மூன்று முறை) படிக்கும்படி உற்சாகப் படுத்துங்கள். பின்பு புதிய ஏற்பாட்டையும் (3 முறை) படிக்கத் தூண்டுங்கள்.
10. வாழ்வைக் கட்டுகின்ற பணியாளர் புத்தகத்தின் நான்கு அஸ்திபாரங்கள் பாடமுறைஅல்லது சம்பந்தப்பட்ட வேத ஆராய்ச்சி நூல்களைப் பயன்படுத்தி அவர்களை கட்டும் பணியில் ஈடுபடுங்கள்.

11. நித்திய ஜீவனைப் பற்றும் நிச்சயத்தை வேதாகம ஆதாரத்துடன் படித்து கிறிஸ்துவோடு தனிப்பட்ட உறவில் வளர உதவுங்கள் (1.யோவான் 5:11-13, யோவான் 1:12).

12. ஆவிக்குரிய வளர்ச்சிக்கு "நான்கு உரைகள்" என்பதை மறுபரிசீலனை செய்து முழு "சக்கரத்தை"யும் வேதவசனங்கள் உட்பட மனப்பாடம் செய்ய வையுங்கள் (மறுபக்கம் காண்க).

    அ. ஜெபம் மற்றும் துதி மூலம் தேவனோடு உரையாடுகிறேன் (பிலிப்பியர் 4:6-7; எபிரெயர் 13:15).

    ஆ. தேவன் என்னோடு தமது வசனத்தைக் கொண்டு உரையாடுகிறார் (2.தீமோத்தேயு 2:15; 1.பேதுரு 2:2).

    இ. பிறகிறிஸ்தவர்களுடன் ஐக்கியம் மூலம் உரையாடுகிறேன் (1.யோவான் 1:3; எபிரெயர் 10:24-25).

    ஈ. கிறிஸ்தரல்லாதாரோடு எனது சாட்சியின் மூலம் உரையாடுகிறேன் (அப்போஸ்தலர் 1:8; எபிரெயர் 10:24-25).

13. வாழ்வைக் கட்டும் "முடிவை நோக்கி", "உண்மை விசுவாசம்" போன்றஆய்வு வழிகாட்டிகளில் ஒன்றைஅவர்களுடன் சேர்ந்து படியுங்கள்.

14. அவர்களிடம் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட நூல்களை அறிமுகஞ் செய்யுங்கள் (வேத ஆராய்ச்சி நூல்கள், ஒலி/ஒளி நாடாக்கள், ஸிடிக்கள்).

15. வேதவாக்கியங்களை மனப்பாடம் செய்ய ஊக்குவியுங்கள் (சங்கீதம் 119:9-11).

16. பரிசுத்த ஆவியின் நிறைவால் கட்டுப்பட்டு வாழவும், அவர்கள் தேவைகள், பணி, ஊழியம், பணத்தேவைகள் முதலியவைகளுக்காக அவர்களோடு சேர்ந்து, அவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்.

17. பிறருடன் கிறிஸ்துவைப் பகரும்படி ஊக்குவியுங்கள் (லூக்கா 8:39).

    அ. அவர்களது சொந்த சாட்சியை எவ்வாறு பகருவது என்பதை பவர் பாக் 4,5 பக்கங்களில் கண்டவிதமாகப் போதியுங்கள்.

    ஆ. ஆவிக்குரிய நான்கு விதிகள் மற்றும் நற்செய்தி கைப்பிரதியை எவ்வாறு பிறருடன் பகருவது என்று போதியுங்கள்.


    இ. இந்த சீஷத்துவ விளக்கத்தைப் பிறருடன் எவ்வாறு பயன்படுத்துவது என்று போதியுங்கள்.

18. அவர்களை ஆலய வழிபாட்டுக்கும் வேத ஆராய்ச்சி வகுப்புகளுக்கும், பிறசர்வதேச ஊழியர் பயிற்சி முகாம்கள் மற்றும் சக ஊழியர்களிடம் கொண்டு வாருங்கள்.

19. முடிந்தால், அவர்களைப் பிறஊழியங்களுக்கும் சர்வதேச ஸ்தாபனங்களுக்கும் அறிமுகம் செய்து, ஊழியவாய்ப்பு ஏற்படுத்துங்கள்.

20. இறுதியாக, ஐக்கியத்தில் ஈடுபட்டு, வேதவாக்கியங்களைக் கொண்டு கணவன்-மனைவி உறவு, பிள்ளைகளை வளர்த்தல், கீழ்ப்படிதல், பணக்கட்டுப்பாடு, குணசீலம் முதலியவைகளைக் கற்று பின்பற்றச் செய்யுங்கள்.

# ஆவிக்குரிய வளர்ச்சிக்கு “நான்கு உரைகள்”



# தேவனுடைய வார்த்தையைப் பயனுள்ளதாகப் போதிப்பது எப்ட



1. தமது பரிசுத்த ஆவியால் அவர் உன்னை நிரப்பி கட்டுப்படுத்தும்படி கர்த்தருக்கு உன்னை ஒப்புவி (ரோமர் 12:1-2) (எபேசியர் 5:18).

2. உனது குழுவினரின் தேவை எது என்றும், ஆவிக்குரிய நிலையில் எங்கு நிற்கிறார்கள் என்றும் புரிந்துகொள்ள தேவனுடைய வழிநடத்துதலுக்காக ஜெபி. உனது குழுத் தலைவரிடம் குழுவின் அங்கத்தினரின் ஆவிக்குரிய முதிர்ச்சி அளவைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். "எனது போதனை 100 சதவீதம் பயனுள்ளதாக இருப்பின், எனது குழுவினர் என்னிடமிருந்து எதைச் செய்யவும் நினைக்கவும் உணரவும் விரும்புகின்றேன்?"

3. நீ செய்தி அளிக்க எவ்வளவு நேரம் கொடுக்கப்படும் என்பதை அறிந்து அதற்கு இரண்டத்தனையான நேரத்தை ஜெபித்து ஆயத்தப்படுத்தும்படி எடு. உதாரணமாக, ஒரு மணி நேர செய்திக்கு 2 மணி நேர ஆயத்தம் செய்துக்கொள்.

4. ஆயத்தம் செய்:

   அ. பொருத்தமான வேதவாக்கியங்கள் நீ கூறவேண்டிய கருப்பொருளுக்கு இசைந்ததாக இருக்கட்டும்.

   ஆ. நல்ல போதனாமுறை உபகரணங்களைக் கொண்டு உனது குறிப்புகளை வலியுறுத்து: கணினியில் பவர் பாயின்ட், சுவரொட்டிகள், ஓ.ஹெச்.பி. படக்காட்சி, மற்றும் நேரடி உதாரணங்கள் (ஒரு படம் "ஆயிரம் வார்த்தைகளப் பேசும்" என்பதை நினைவு கூரு).

   இ. கலந்துரையாடல் உதவிக்காக ஒவ்வொருவரிடமும் முக்கிய வார்த்தைகள் அல்லது குறிப்புகளை எழுதும்படி காகிதம் கொடுங்கள். நீ பேச நினைக்கிறசத்தியத்தை உன் நேயர்கள் தேடி கண்டுபிடிக்க உதவிச் செய். பின்பு உன் விடைகளைக் கூறு. கூடியமட்டும் அவர்களை 2 அல்லது 3 பேர் கொண்ட சிறு குழுக்கலாகப் பிரித்து அமர்த்துங்கள்.

   ஈ. உனது முக்கிய குறிப்புகளை அழுத்தமாக மனதில் பதிக்கும்படி நல்ல "கதைகளை" ப் பயன்படுத்துங்கள். இயேசு போதிக்கும் போதெல்லாம் கதைகள் கூறினார் என்பதை நினைவுகூரு. ஜனங்களுக்குக் கதைகள் என்றால் பிடிக்கும்!

   உ. இன்னும் இரண்டொரு நாட்களில், உங்கள் போதனைக் கேட்கும் குழுவினர் செய்ய வேண்டிய காரியங்களை நினைத்து, அடியெடுத்து வேலை ஆரம்பியுங்கள். ஜனங்கள் கேட்கிறவைகளில் 80 சதவீதம் கருத்தை முதல் 24 மணி நேரத்திலும், மீதி 20 சதவீதம் 10 நாட்களிலும் தங்கள் வாழ்வில் பழக்கப்படுத்தாத பட்சத்தில் மறந்து விடுவர்.

5. குழு சிறியதாக இருந்தால் அங்கத்தினரில் பெயர்களைக் கேட்டு பயன்படுத்தலாம். கதாபாத்திரங்களில் அவர்களைத் தொடுத்து கூறலாம். பெரிய குழுவாக பெயர்களை எழுதிவைத்து பயன்படுத்தலாம்.

6. உங்கள் தலையை நிமிர்த்தி, குழுவினரின் கண்களை உற்றுப் பார்த்து பேசுங்கள்.

7. உங்கள் குழுவினரை முடிந்த அளவில் அருகில் அமர்த்துங்கள். பெட்டி மறைவில் ஒளிந்து நிற்காமல், திறந்த வெளியில் எதிரில் நிற்பது நன்று.

8. நேர்மையாக, அன்பு, ஊக்கம் மற்றும் உற்சாகத்துடன் காணப்படுங்கள். போதிக்கையில் இவைகள் மிக முக்கியம்.

9. பொருத்தமான நல்ல ஆடை அணியுங்கள். எப்போதும் கிறிஸ்துவைச் சீராக வெளிப்படுத்தும் முறையில் நடந்து, பேசுங்கள். அனைத்தையும் மிக நன்றாகச் செய்து முடியுங்கள் (1.கொரிந்தியர் 10:31).

# சிறு குழு பயிற்சி



**1. எவ்வாறு ஆரம்பிப்பது:**

ஹ. ஜெபத்துடன் ஆர்வமுள்ள கிறிஸ்தவர்களை(அவிசுவாசிகளை அல்ல)த் தெரிந்து கொண்டு, நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் அழையுங்கள்.

ஸ. அழைப்பவர்களைக் கண்டிப்பாக 12 பேருக்குக் குறையுங்கள். உங்கள் குழுவில் அனைவரும் ஆண்கள், பெண்கள் அல்லது தம்பதிகளாக இருக்க ஏற்பாடு செய்யலாம்.

ஷ. ஓர் குறிப்பிட்ட இடத்தை(ஒரு வீடாக இருப்பது நல்லது)யும், நேரத்தையும் ஒதுக்குங்கள். வாரம் ஒரு முறைஅல்லது மாதமிரு முறை2 மணி நேரம் வீதம் செலவழிப்பது அவசியம்.

க்ஷ. வீட்டின் தலைவர் அல்லது தம்பதிகள் இணைந்து, காப்பி டீசெலவுகளைத் தாங்குவதோடு, அன்றைய கூட்டத்தையும் நடத்துவார்கள்.

**2. சில ஆதாரக் கொள்கைகள்:**

அ. எப்போதும் கிறிஸ்துவை மேம்படுத்துங்கள்.

ஆ. வேதாகமம் நமது ஆராய்ச்சிக்கான புத்தகம். எனவே பொருத்தமான வேத வசனங்களைத் தெரிந்தெடுத்து, வாழ்க்கையில் ஈடுபடுத்துங்கள் (காண்க, குறிப்பு 4).

இ. நடத்துகிறவர் உரையாடலில் தலையிடக்கூடாது, அதற்குப் பதிலாக அனைவரையும் பங்குகொள்ளும்படி ஊக்குவிக்க வேண்டும். கூட்டம் நின்று போகாமல் ”கோர்வை”யாக நடக்க வேண்டும். சகலமும் ஒழுங்காக நடக்கட்டும்.

ஈ. நடத்துபவர் வேத ஆராய்ச்சிக்குத் தேவையான ஆயத்தத்தோடு இருக்க வேண்டும்.

உ. உரையாடலின் போது ஜனங்களின் பெயரைப் பயன்படுத்துங்கள்.

ஊ. பரிசுத்த ஆவிக்கும் குழுவின் தேவைக்கும் இசைந்திருங்கள், நேர்மையாகவும் திறந்த மனதுடனும் ஒருவரையொருவர் சிநேகிக்கப் பாருங்கள். குழுவில் ஒவ்வொருவரின் தேவைகளை உணர்ந்திருங்கள் (ஜெபம், ஆலோசனைகள், நூல், கருவிகள், தின்பண்டங்கள், முதலியன).

எ. ஒருவருக்காக மற்றொருவர் சாதாரண உரையாடல் வார்த்தைகளில் ஜெபிக்கும்படி ஊக்கப்படுத்துங்கள்.

ஏ. சம அளவில் அனைத்தையும் செய்யுங்கள் (ஆராதனை, பாட்டு, வேத ஆராய்ச்சி, அநுபவங்களைப் பகருதல், ஐக்கியம், ஆலோசனைத் தேவைகள், ஜெப ஊழியம்).

**3. உரையாடலை ஊக்குவிக்கச் சில ஆலோசனைகள்:**

ஹ. உரையாடலுக்கான வேதபகுதியை குழுவில் ஒவ்வொருவராகப் படியுங்கள்.

ஸ. வாசித்த பகுதியைத் திரும்பி பார்க்க சில நிமிடங்கள் அமைதலாக விடுங்கள்.

ஷ. சிறு குழுக்களில் 2/3 பேராக இணைந்து, வாசித்த பகுதியில் உள்ள சாராம்சம், குறிப்பிட்ட வார்த்தைகள், முக்கிய கருத்துக்கள், முதலியவைகளைக் கலந்துரையாடுங்கள்.

க்ஷ. எண்ணத்தைக் கிளறக்கூடிய குறிப்பிட்ட கேள்விகளைக் கேளுங்கள்.

1. இதனால் (வசனம் அல்லது வார்த்தை) என்ன தெரிந்து கொண்டீர்கள்?
2. எந்த குறிப்பிட்ட எண்ணத்தைத் தேவன் இதன் மூலம் சுட்டிகாட்டுகிறார்?
3. இந்த எண்ணத்திற்கு ஏற்ப உனது எண்ணம், நடத்தை, உணர்வை எப்படி திருத்துவாய்?
4. எப்படி (குறிப்பிட்ட விதத்தில்) இந்த பகுதியில் நீ அநுபவப்பட்டிருக்கிறாய்?
5. எது (குறிப்பிட்ட விதத்தில்) உங்களுக்கு இந்த பகுதியில் உதவியாக இருந்தது? (உதாரணம் கொடுங்கள்).
6. இந்த சத்தியத்தை எந்தெந்த வழிகளில் எனது வாழ்வில் அநுபவிக்க முடியும்?
7. இந்தப் பகுதியில் நான் அநுபவித்துள்ள தடைகள் எவை? அவற்றைமேற்கொள்ள என்ன செய்தேன்?
8. இதை விளக்குகின்றஇதைப்போன்றவேறு வேதவாக்கியங்கள் எவை?
9. இந்தப் பகுதியிலுள்ள எந்த வேதவசனம் அல்லது வார்த்தையைப் புரிந்து கொள்ள முடியவில்லை?

**4) ஆலோசனைக்காகச் சில வேத வசனங்கள்:**

எபேசியர் 4:1-3
எபேசியர் 4:24-32
எபேசியர்5:1-11
1.தெசலோனிக்கேயர் 5:14-23
கொலோசெயர் 3:12
பிலிப்பியர் 4:4-8
ரோமர் 12:9-17
எபிரெயர் 10:23-2
2.பேதுரு 1:3-8
1.பேதுரு 5:1-9
2.கொரிந்தியர் 6:4-7
பி லிப்பியர் 2:1-11

# உங்கள் வேதாகமத்தைப் படிப்பது எப்படி ?



தேவனுடைய வார்த்தையை ஒழுங்காகப் படிப்பதின் மூலம் செழிப்பான பயனுள்ள அறிவும் விவேகமும் கிடைப்பதற்கு உதவியாக இங்கு சில ஆலோசனைகள் கொடுக்கப் பட்டுள்ளன.

**1. ஏன் தேவனுடைய வசனத்தைப் படிக்க வேண்டும்;**

அ. உன் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவும் (1 பேதுரு 2:2).

ஆ. கிறிஸ்துவின் சேவைக்கென்று அது உன்னை ஆயத்தப்படுத்தும் (2.தீமோத்தேயு 3:16-17).

இ. அது உன் விசுவாசத்தை வளர்க்கும் (ரோமர் 10:17).

ஈ. தேவனைப் பிரியப்படுத்துவது எப்படி என்று அது உனக்கு காட்டும். (1.தெசலோனிக்கேயர் 4:1-2).

**2. படிப்பதற்கு ஏற்றஉபகரணங்களும் பொருட்களும்:**

**அ. படிப்பிற்குத் தேவையான உபகரணங்கள்:**

1. நவீன வேதாகம மொழிபெயர்ப்புகள்.
2. ஒரு நோட்டுப் புத்தகம், ஒரு நல்ல எழுதுக்கோல், தங்க வாக்கியங்களைக் கோடிட ஒரு அளவுகோல்.
3. நல்ல வேதாகம விளக்கவுரைகள்.

**ஆ. படிப்பிற்கு உதவியான உபகரணங்கள்:**

1. தலைப்புகள் கொண்ட வேதாகமங்கள்.
2. வெவ்வேறு வேதாகம மொழிபெயர்ப்புகள்.
3. வேதாகம அகராதி.
4. கிரேக்க - ஆங்கில விளக்கவுரை.

**3. வெற்றிகரமான வேத ஆராய்ச்சிக்கு வழி**

அ. தேவனுடைய வார்த்தையை அறிந்துகொள்ள தீர்க்கமான வாஞ்சை உனக்குத் தேவை (அப்போஸ்தலர் 17:11).

ஆ. பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலுக்காக ஜெபி. (யோவான் 16:13).

இ. வெறுமையாகத் தேவனுடைய வார்த்தையை வாசியாமல் அதைப் படி (2.தீமோத்தேயு 2:15).

ஈ. முக்கியமான வேத வசனங்களை மனப்பாடம் செய் (சங்கீதம் 119:11).

உ. வேதம் படிக்க நேரத்தை உண்டாக்கு .

ஊ. நீ கற்றதிற்குக் கீழ்ப்படி (யாக்கோபு 1:22).

எ. வேதாகமத்தின் கருப்பொருள் இயேசு கிறிஸ்து என்பதை உணர்ந்துக் கொள். வேதாகமத்தின் நோக்கம் மீட்பையும் தேவனுடைய அன்பையும் வெளிப்படுத்துவது ஆகும் (யோவான் 20:31).

**4. வியாக்கியானம் செய்ய சில விதிமுறைகள்:**

அ. எப்போதும் ஒரு வசனத்தை அதற்குச் சம்பந்தப்பட்ட பகுதியுடன் இணைத்து வியாக்கியானம் செய்யுங்கள். நீங்கள் படிக்கும் வசனத்துக்கு முன்பும் பின்பும் சம்பந்தப்பட்ட அநேக வசனங்களைப் படியுங்கள்.

ஆ. கிரகிக்காத வசனம் அல்லது பகுதியை அதைப் போன்றபிறவேதவசனங்களுடன் ஒப்பிடு. ஒரே கருப்பொருள் கொண்ட அநேக வேதவாக்கியங்களைப் படிப்பதன் மூலம் வசனங்களை அறிகிறதற்கும் வியாக்கியானம் பண்ணுகிறதற்கும் ஏதுவாக நம்மைப் பெலப்படுத்துகிறது.

இ. அந்த வசனம் யாருக்குச் சொல்லப்பட்டது என்றும், எந்த சூழ்நிலையில் கூறப்பட்டது என்றும் தீர்மானி.

ஈ. காலத்திட்டதிற்கு ஏற்றதேவனுடைய கொள்கை மாற்றங்களை நன்றாகப் பழகிக்கொள். (காலத்திட்டம் என்பது ஒரு காலத்தின் தீர்க்கதரிசி மூலம் தேவன் பேசின வார்த்தை மற்றகாலத்தில் மாறுகிறது ஆகும்). (யோவான் 1:17) .

உ. ஒரு வேதபகுதியில் காணப்படுகிறதெளிவான விளக்கத்துக்கும் வியாக்கியானத்துக்கும் முக்கியத்துவம் கொடு.

ஊ. எல்லா வேதவசனங்களும் அவற்றின் மூல பாஷைகளில் கண்ட அர்த்தத்தின்படி வியாக்கியானம் செய்தால் அவைகள் சரியாகவும் உண்மையாகவும் இருக்கும்.

எ. புதிய ஏற்பாட்டை ஆராயவேண்டுமென்றால் பழைய ஏற்பாட்டைத் தொடர்ந்து ஆராயவேண்டும்.அப்படியே பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டுடன் ஒப்பிட்டு படியுங்கள்.

## 5. வேத ஆராய்ச்சியின் விதங்கள்:

**அ. தலைப்பின் கீழ் ஆராய்ச்சி:**

வேதாகமத்தில் கூறப்பட்ட உனக்குப் பிடித்தமான வெவ்வேறு தலைப்புகளின் அடிப்படையில், உதாரணமாக இரட்சிப்பு, பரிசுத்த ஆவி, நீதிமானாக்குதல் நித்திய பாதுகாப்பு முதலியவைகளைப் போன்றபிறவேதவசனங்களை ஆராய்ந்து சேகரி.

**ஆ. ஒப்பனை ஆராய்ச்சி:**

ஒப்பனைகள் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியைப் பட்டியலிடு. (ஒப்பனை என்பது வேதாகம சத்தியத்தின் அடிப்படையில் தெய்வீகமாக சித்தரிக்கப்பட்ட ஒரு பாத்திரத்தைக் குறிக்கும்). உதாரணமாக: ஆதாம் கிறிஸ்துவுக்கு ஓர் ஒப்பனை (ரோமர் 5:14). மெல்கிசெதேக்கு கிறிஸ்துவுக்கு ஓர் ஒப்பனை (எபிரெயர் 5:6), முதலியன.

**இ. சுயசரிதை ஆராய்ச்சி:**

வேதாகமத்தின் பாத்திரங்களைப் படித்து அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட எல்லா வேத வசனங்களை ஆராய்ந்து, அவர்களோடும், அவர்கள் வாழ்க்கை மற்றும் குணத்தோடு தேவன் ஈடுபடுகிறதும், அவர்கது வெற்றி மற்றும் பாவம் முதலியவைகளையும் படியுங்கள்.

**ஈ. வார்த்தை ஆராய்ச்சி:**

முக்கிய வார்த்தைகளின் அடிப்படை அர்த்தத்தை பிறமொழிப் பெயர்ப்புகளுடன் ஒப்பிட்டு வேதபகுதியை ஆராயுங்கள். வேதாகம ஒத்துவாக்கிய அகராதிகளிலும், மூலபாஷை அகராதிகளிலும் தேடிக் கண்டுப்பிடியுங்கள். இவ்வாறு தேவ ஆவியினால் அருளப்பட்ட வேத வசனங்களை அறிகிறஅறிவில் வளருவீர்கள்.

**உ. நூல் ஆராய்ச்சி :**

வேதாகமத்தை ஒவ்வொரு புத்தகமாக நன்றாகப் படி. அதை வாசிக்கும்போது "இதன் அர்த்தம் என்ன ?" என்றும், "இதை என் வாழ்வில் எப்படிப் பயன் படுத்துவது ?" என்றும் உன்னையே கேள்.

## 6. உன் வேதாகமத்தில் குறியிடுவது எப்படி ?

வேதவாக்கியங்களை நன்றாகப் படிக்கும் வழிகளில் ஒன்று ஒழுங்காக தங்க வாக்கியங்களை அல்லது வார்த்தைத் தொகுதியை அடையாளம் இடுவதாகும்.

அ. முக்கியமான வேதவாக்கியங்களைச் சுத்தமாக கோடிடலாம்.

ஆ. வெவ்வேறு வர்ணங்களைக் கொண்டு வெவ்வேறு தலைப்புகளுக்குக் குறியிடலாம். உதாரணமாக, ஆவிக்குரிய வளர்ச்சிக்குப் பச்சை நிறமும், இயேசுவின் மரணத்திற்குச் சிவப்பு வர்ணமுமாக பயன்படுத்தலாம்.

இ. குறிப்பிட்ட வசனங்களின் தலைப்புகளுக்கேற்றஎழுத்துக்களை அருகில் குறிப்யிடலாம். உதாரணமாக "ர" என்றஎழுத்தை இரட்சிப்புக்கும், "வா" என்றஎழுத்தை வானத்துக்கும் பயன்படுத்தலாம்.

ஈ. வேத வசனங்களில் நீ கண்டுப் பிடித்த மூலஅர்த்தம் அல்லது விளக்கம் இருந்தால் அதை ஓரத்தில் குறிக்கலாம்.


உ. மேலே படித்த தலைப்புகளின் கீழ், நீ கண்ட குறுக்கு வேதவாக்கியங்களை உன் வசதி போல் குறிக்கலாம். இதை வசன முடிவில் நீ கண்டுப் பிடித்த வேதவசனத்தைக் குறிக்கவும். அதைத் தொடர்ந்து அடுத்த வசனத்தின் கீழ் முன்னும் பின்னும் தொடர்புள்ள வசனங்களைக் குறிக்கவும். இவ்வாறாக தொடர்புள்ள வசனங்களை முன்னும் பின்னுமாகக் குறித்து வைத்தல் பிற்காலத்தில் மிகவும் உதவியாக இருக்கும்.


# நமது குறியீடு

**வாசியுங்கள்: மத்தேயு 28:18-20**

**குறி - கிறிஸ்துவின் மாபெரும் கட்டளையை நிறைவேற்றஉதவி செய்தல் !**

- ✦ **வசனம் - 18 : காலத்தின் முக்கியத்துவத்தை இங்கு கவனியுங்கள்.**
- ✦ **வசனம் - 18 : கிறிஸ்துவுக்கு உலகத்திலும் வானத்திலும் சர்வ அதிகாரம் உண்டு !**
- ✦ **வசனம் - 19 : ஆகையால்... "போங்கள்" (நில் என்பதற்கு எதிர்பதம்)**
- ✦ **வசனம் - 19 : போய் என்ன செய்யவேண்டும் ? "சீஷராக்குங்கள்"**
  "ஆக்குங்கள்" என்பது ஒரு முன்னேற்றத்தைக் குறிக்கிறது
  "சீஷர்கள்", "ஆத்துமாக்கள்" அல்ல !
  ? (அ-து) கிறிஸ்துவைப் பின்பற்றுகிறஒருவன்; கிறிஸ்தவ முதிர்ச்சியில் வளருபவன்.
- ✦ **வசனம் - 19 : "அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்"**
  ? (அ-து) அவர்களைக் கிறிஸ்தவவின் சரீரத்தில் சேர்த்து, அவர்கள் கிறிஸ்துவில் வைத்த அவர்களது விசுவாசத்தை வெளிப்படையாக அறிக்கை செய்யவேண்டும்.
- ✦ **வசனம் - 20 : "அவர்களுக்குப் போதியுங்கள்"**
  ? (அ-து) அவர்களைத் தேவனுடைய வார்த்தையில் வளரச் செய்து பிறரை கிறிஸ்துவுக்கு ஆதாயம் செய்ய வைக்க வேண்டும்.
- ✦ **வசனம் - 20 : அவர் எப்போதும் நம்மோடு இருப்பேன் என்று வாக்களித்துள்ளார்.**


பணி
ஆவிக்குரியது
சமூகம்
பணம்
இல்லறம்
நண்பர்
மானசீகம்
லௌகீகம்
ஐக்கியம்
சுரெம்




# பரிசுத்த வேதத்தின்படி தேவபயமுள்ள ஒரு தலைவனது குணலட்சணங்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஒரு தாசனுடைய உள்ளம் | மாற்கு 10:42-45 |
| 2. | பரிசுத்த ஆவியினால் வல்லமை | எபேசியர் 5:18,<br>அப்போஸ்தலர் 4:31,<br>யோவான் 7:38-39 |
| 3. | உண்மை | மத்தேயு 25:21 |
| 4. | சரியான முன்னுரிமைகள் | மத்தேயு 6:33 |
| 5. | தேவனுக்கு அர்ப்பணம் | ராமர் 12:1-2 |
| 6. | கற்பிலும் பரிசுத்தத்திலும் மாதிரி | 1.தீமோத்தேயு 4:12 |
| 7. | ஜெபிக்கிறமனிதன் | கொலோசெயர் 1:9-10,<br>எபேசியர் 6:18 |
| 8. | ஒரு உதாரணம் - முன்மாதிரி | 1.தீமோத்தேயு 4:12,<br>பிலிப்பியர் 4:9 |

| | |
|---|---|
| 9. தாழ்மையுள்ள மனிதன் | 1.பேதுரு 5:5-6 |
| 10. கிறிஸ்துவிடம் ஜனங்களைக் கொண்டு வருகிறவன் | அப்போஸ்தலர் 1:8, யோவான் 1:42 |
| 11. மனிதரைப் பிடிக்கிறவன் | மத்தேயு 28:18-20 |
| 12. ஒரு ஆவிக்குரிய பெருக்கமுள்ளவன் | 2.தீமோத்தேயு 2:2 |
| 13. வேத வசனத்தைப் பகுத்துப் போதிக்கிறவன் | 2. தீமோத்தேயு 2:15, 2. தீமோத்தேயு 4:1-5 |
| 14. கடினமான கஷ்டங்களைச் சகிக்கிறவன் | 2. தீமோத்தேயு 2:3-4 |
| 15. ஆவிக்குரிய போராட்டத்தில் பங்கு பெறுபவன் | 1.பேதுரு 5:8, எபேசியர் 6:10-12 (பொன், மகிமை, பெண்கள்) |
| 16. கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாகிறான் | ரோமர் 8:29 |